



- வாழ்வோம்

ஒரு கிராம் தங்கத்தில், பெண்களைப் பின்னோக்கி அழைத்துச்செல்லும் 'தாய்மாமன் தங்கமோதிரம்' என்கிற திட்டம், குழந்தைப்பேறு முடியாத உடல்ரீதியாகப் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் பெண்களுக்குக் கூடுதலாக சமூகத்தில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தும்' என முகநூலில் தன் கருத்தைப் பகிர்ந்துள்ளார், ஊடக வியலாளர் சுகிதா சாரங்கராஜ். அவரது பதிவிலிருந்து...

"தாய்மை அடைய முடியாத பெண்கள் பலர், தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே தாய்மை சென்டிமென்ட்டை முதலீடாகக் கொண்டுதான் கருத்தரிப்பு மருத்துவமனைகள் கல்லா கட்டுகின்றன . இதில், இன்னும் கூடுதல் கல்லா கட்ட இந்தத் திட்டம் மறைமுகமாக உதவும்.


குடும்பத்தினர் தொடங்கி உறவினர்கள், அக்கம்பக்கத்தினர், ஊர்க்காரர்கள் என சமூகத்தில் எந்தப் பக்கம் திரும்பினாலும் தாய்மை அடைய முடியாத நிலையில் உள்ள பெண்கள் எதிர் கொள்ளும் நெருக்கடிகள், சங்கடங்கள், உளவியல் அழுத்தங்கள், நீங்கள் சொல்கிற 'உணர்வு பூர்வமானதைவிட அதிபயங்கரமானவை. அவை, தினம் தினம் அத்தகையப் பெண்களை ரத்தமும் சதையுமாகக் குத்திக் கிழித்துக் கொண்டுள்ளது. இப்போது, இந்த அரசின் 'தாய் மாமன் சீர் திட்டமும்' சேர்ந்து குத்திக் கொல்லும்.

புதிய நெருக்கடிகளை உருவாக்கும் த.வெ.க.!

தாய்மையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பெண்களும், தாய்மை அடைய முடியாத பெண்களும், தாய்மையைப் பொருட்டாகக் கொள்ளாமல் வாழும் அனைத்துத் தரப்பு பெண்களும், த.வெ.க. என்னும் கட்சிக்கு வாக்களித்திருப்பார்கள்தானே.

சகோதரி பெற்ற பிள்ளைக்குத் 'தாய்மாமன் சீர்' செய்யும் முதலமைச்சர் விஜய், தாய்மை அடைய முடியாத பெண்களுக்கு ஒரு அண்ணனாக, தம்பியாக என்ன திட்டத்தைக் கைமாறாகச் செய்யப்போகிறார்" எனக் கேள்வி எழுப்பி இருக்கிறார்.

இழிதன்மை வாழ்வு ஒழிக! ஒழிக!



கௌதம் ராஜ்

பழுப்பறை 133

சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

தெய்வத்தின் பெயராலும் அதிகார வர்க்கத்தாலும், கட்டிக்காக்கப்பட்ட 'தேவதாசி முறை', சமூகத்தில் இருந்து ஒழிக்கப்பட்டு, பல பத்தாண்டுகள் கடந்திருந்தாலும், இன்றைக்கும் அத்தகைய இழிவு வழக்கத்தைப் போற்றிப் புகழும் நிகழ்வுகள் நடந்தவண்ணம் உள்ளன. இந்த நிலையில், கிட்டத்தட்ட 90 ஆண்டுகளுக்கு முன் 'சுயமரியாதைச் சுடரொளி'யாகத் திகழ்ந்த மூவலூர் ராமாமிர்தத்தம்மையார் எழுதிய 'தாசிகளின் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்' எனும் நாவல் கவனம் பெறுகிறது.

இந்நூலை வெளியிட, சிவகிரி ஜமீன்தாரிணி வெள்ளைத்துரைச்சி நாச்சியார் உதவியதோடு மட்டுமின்றி, அதற்கு 'ஒவ்வொரு தமிழ்மகனும் தமிழ்மகளும் இந்த நாவலைத் தவறாமல் வாசிக்க வேண்டும்' என்று வலியுறுத்தும் அழகிய முன்னுரையையும் எழுதி வழங்கியுள்ளார். 1936-ஆம் ஆண்டு, தந்தை பெரியாரின் ஈரோடு 'உண்மை விளக்கம்' அச்சுக்கூடத்தில் இந்நூல் அச்சடிக்கப்பட்டது. நீண்ட நாட்களுக்குப் பிறகு, 2009-ஆம் ஆண்டு இந்நூலை மீண்டும் தோழர் வாலாசா வல்லவன் அவர்கள் பதிப்பித்தார்.

தனித்தமிழ் இயக்க முன்னோடியான நாவலர் சோமசுந்தர பாரதியார், 'தமிழ்நாட்டில் இருபாலாரும் பழுதற்ற காதல் மணமுறைகளைக் கைப்பற்றித் தீய வொழுக்கங்களை விலக்கி, ஆக்கமும் இன்பமும் அடைய வேண்டும்' என விரும்பும் ஆசார சீர்திருத்தக்காரர் அனைவரும் இப்புத்தகத்தை ஆதரிக்க வேண்டும்' எனக் கூறி, ஒரு மதிப்புரையும் வழங்கி இருக்கிறார். மேலும், திராவிட இயக்க வீராங்கனையான குஞ்சிதம் குருசாமி அம்மையார், இந்நூலுக்குப் புகழுரை வழங்கிப் பாராட்டியுள்ளார்.

அந்தக் காலகட்ட அரசியல் சூழலும் 'தேவதாசி முறை' மீது ராமாமிர்தத்தம்மையார் கொண்டிருந்த சீரிய விமர்சனமும் இந்த நாவல் முழுக்கவே வெளிப்படுகிறது. குறிப்பாக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, சமூக சீர்திருத்தத் தலைவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்ட, சத்தியமூர்த்தி சாஸ்திரி போன்றவர்கள், 'தேவதாசிகள் இருக்க வேண்டும். தேவதாசி முறையை ஒழிப்பது தெய்வ விரோதம் - சட்ட விரோதம்' என்று பிரச்சாரம் செய்ததைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

தந்தை பெரியார், திரு.வி.கலியாணசுந்தரனார், டாக்டர் வரதராஜுலு போன்ற தமிழ்நாட்டுத் தலைவர்கள் 'தேவதாசி முறை'யை ஒழிப்பதில் காட்டிய அக்கறையையும், சொந்த சமூகத்தில் ஏற்பட்ட பலமான எதிர்ப்புகளுக்கு இடையிலேயும் நாதசுரக் கலைஞர் டி.என்.ராஜரத்தினம், சீர்காழி பெ.நா.சுப்பையா போன்றவர்கள் உடன் நின்று உற்சாகமூட்டியதையும் பரிவுடன் பகிர்ந்துள்ளார்.

23 அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல், மூவலூர் ராமாமிர்தத்தம்மையாருக்கு இளம் வயதில் ஏற்பட்ட துயர நிகழ்வுகளையும், அவர் சார்ந்த சமூகம் அனுபவித்த இழி தன்மைகளைச் சாடுவதாகவும் அதே நேரத்தில் சுயமரியாதைக் கொள்கைகளை மக்களிடம் பரப்பும் நோக்கிலும் எழுதப்பட்டுள்ளது. இறுதியாக, 'தேவதாசிகளுக்கு ஒரு எச்சரிக்கை' என்ற அத்தியாயத்தில் 'இனிப்பாகப் பேசி இழிதன்மை நிறைந்த வாழ்வுக்குள் தள்ள முயலும் ஆண்களின் சொற்களுக்கு, இக்குலப் பெண்கள் மயங்கிவிடக் கூடாது' என்ற எச்சரிக்கையுடன் நிறைவு செய்கிறார். சுயமரியாதை உணர்வு கொண்ட ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய நாவல் இது.

...வாசிப்போம்.

இந்த திராவிடன் யார்?



தென்னரசு பழநிச்சாமி, கோபிசெட்டிபாளையம்.

தி.மு.க. நிர்வாகிகள் பண்ணையார்த்தனம் செய்யும் குறுநில மன்னர்களாக இருப்பதால், எளியவர்களுக்குத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைப்பதில்லை என்பதையும், த.வெ.க.வில் புதியவர்கள்-எளியவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதால்தான் அவர்கள் ஜெயித்தார்கள் என்பதையும் ஏற்கிறீர்களா?

த.வெ.க.வில் விஜய் உள்பட பலரும் சட்டமன்றத்திற்குப் புதியவர்கள். ஆனால், எளியவர்களா? ஏழைகளா? இல்லை. 'கருப்புப் பண மோசடி', 'லாட்டரி மார்ட்டின', 'குவாரிக் கொள்ளை', சட்டவிரோதத் தொழில்களில் கோடீஸ்வரராரானவர்கள் உள்ளிட்ட வசதி படைத்த பலரும்தான் எம்.எல்.ஏ.க்களாகவும் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. போட்டியிட்ட 164 தொகுதிகளில் 70-க்கும் மேற்பட்டவற்றில் புதியவர்கள்தான் களமிறக்கப்பட்டனர். தென்காசி, வானூர், வேப்பனஹள்ளி உள்ளிட்ட தொகுதிகளில் அவர்கள் வெற்றிபெறவும் செய்தனர்.

அவிநாசித் தொகுதியில் தி.மு.க. சார்பில் 28 வயது டாக்டரான கோகிலா போட்டியிட்டார். அவர் மிக மிக எளிய பின்னணி கொண்டவர்தான். தற்போது மதுராந்தகத்தில் போட்டியிடும் வழக்கறிஞர் இ.பரந்தாமனும், தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் வழக்கறிஞர் சுகன்யாவும் குறுநில மன்னர்களின் வாரிசுகளல்லர். மிக எளிய பின்னணியைக் கொண்ட தி.மு.க. தொண்டர்கள். ஆளுங்கட்சி வேட்பாளர்கள்தான் மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு, மீண்டும் போட்டியிடுகிற பண்ணையார்த்தனம் கொண்ட குறுநில மன்னர் களைப் போல அதிகாரத் திமிருடன் செயல்படுகிறார்கள்.

மு.சந்தோஷ்குமார், சென்னை

இந்த திராவிடன் யார்?

இந்த - எந்த திராவிடனாக இருந்தாலும் அவன், மானுடன். பிறப்பால் மனிதர்களைப் பிரித்து மேல் - கீழ் என்று வரையறுக்கும் சனாதன சக்திகளுக்கு எதிரானவன். மனிதர்கள் ஆணாக, பெண்ணாக, திருநராக எப்படிப் பிறந்தாலும், எந்த மதத்தில் - சாதியில் - மொழியில் பிறந்தாலும் அவர்களுக்கான அடிப்படை உரிமைகள் எதுவும் மறுக்கப்படக் கூடாது என்று சளைக்காமல் களமாடுபவன். ஆதிக்கத்தை எதிர்த்து நிற்பவன். எதன் மீதும் ஆதிக்கம் செலுத்த விரும்பாதவன். சமமான வாய்ப்பும் - சமச்சீரான வளர்ச்சியும் எல்லாருக்கும் கிடைத்திட உழைப்பவன். தன்னை எதிர்ப்பவர்களின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் ஆற்றல் படைத்தவன். தோற்றதாக எதிரிகள் நினைக்கும் நேரத்தில், மீண்டெழுந்து அவர்களை வென்று காட்டுபவன்.

முகிலன், மதுரை.

2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தோல்வியடைந்ததற்கு பல்வேறு காரணங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. 'திராவிட நாடு' போன்ற கோரிக்கைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கைவிட்டதால், அரசியலற்றுப்போனது தான் தோல்விக்குக் காரணம் என்கிறார்களே?

தி.மு.க.வின் வியூகங்கள் மாறும். கொள்கைகள் நிலையானவை. 'திராவிட நாடு' கோரிக்கையை 1963-இல் கைவிட்ட பிறகுதான், 1967-இல் தி.மு.க. முதன் முதலில் ஆட்சியைப் பிடித்தது. இந்தியாவிலேயே ஒரு மாநிலக் கட்சி, அந்த மாநிலத்தில் வெற்றிபெற்று ஆட்சி செய்ய முடியும் என்பதை அனைத்து மாநிலங்களுக்கும் உணர்த்தியது. பல மாநிலங்களிலும் அந்தந்த மாநிலக் கட்சிகளின் ஆட்சி அமைவதற்கு, தி.மு.க.வே வழிகாட்டியாக அமைந்தது. கொள்கைபூர்வமான இயக்கமாக தி.மு.க. இருப்பதால்தான், ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு விதத்தில் எதிரிகள் வருகிறார்கள். தி.மு.க.வை அழிக்க நினைக்கும் எதிரிகள்தான் கடந்த 78 ஆண்டுகளில் மாறியிருக்கிறார்கள். தி.மு.க. நிலையாகத்தான் இருக்கிறது. 2026 தேர்தல் களத்தில் தோல்வியடைந்ததால், தி.மு.க.வின் அடிப்படை இலட்சியம் தோற்றுவிடவில்லை. தோற்கவும் தோற்காது. அரசியலற்ற இளம் தலைமுறைக்கும் அரசியல் பயிற்றுவிக்கும் சமூகக் கடமையை உணர்ந்தே தி.மு.க. பயணிக்கிறது.

(திராவிடன் பதில்கள் பகுதிக்கு உடன்பிறப்புகள், வாசகர்கள் தங்கள் கேள்விகளை அனுப்பலாம். வாட்ஸ்அப் எண் - 82204 51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com)

திராவிடன் பதில்கள் 02

ஃப்ளாஷ்பேக்



தலைவரை வரவேற்று மகிழ்ந்தேன்!

2011-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சித் தேர்தலில், கழக மாநகராட்சி மேயர் வேட்பாளரான அண்ணன் மா.சுப்பிரமணியம் அவர்களை ஆதரித்து, திருவொற்றியூர் பெரியார் நகரில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். அந்த எழுச்சிமிகு கூட்டத்தில், அப்போது மாவட்ட மகளிர் தொண்டர் அணித் துணை அமைப்பாளராக இருந்த நான், தலைவர் அவர்களுக்கு சால்வை கொடுத்து வரவேற்ற மகிழ்வான தருணம்.



- ராதா தங்கவேல் (எ) பரமேஸ்வரி,
முன்னாள் துணை அமைப்பாளர்,
மாவட்ட தொண்டர் அணி, சென்னை வடகிழக்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900